**கோ. எண்.11.264/செ.த.ம.நி./2024-25/கலைஞர் விருது - 2024** **நாள்: 14.06.2024**

## கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது - 2024

### <u>பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன</u>

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தமது சொந்த நிதியிலிருந்து அமைக்கப்பெற்ற கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளையின் மூலமாக ஒவ்வோராண்டும் **கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது** வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2024ஆம் ஆண்டுக்குரிய விருதுக்குப் பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

- இவ்விருது இந்திய நாட்டில் வழங்கப்படும் உயர்ந்த விருதுகளுள் ஒன்றாகும்.
- ரூபாய் பத்து இலட்சம் (ரூ.10,00,000/-) விருதுத் தொகைக்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ், வெண்கலத்தாலான கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச்சிலை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும்.
- செம்மொழித் தமிழாய்விற்குச் சீரிய முறையில் பங்காற்றியுள்ள அறிஞருக்கு அல்லது அறிஞர் குழுவிற்கு இவ்விருது வழங்கப்பெறும். இப்பங்களிப்புப் பண்டைத் தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் பற்றிய புதிய கருத்துகளை வெளிப்படுத்துவதாகவும் உலக அளவில் ஏற்புடையதாகவும் அமைய வேண்டும். கீழ்க்காணும் துறைகளில் மேற்கொள்ளப் பெற்ற ஆய்வாக அமைந்திருக்க வேண்டும்:

1. தொல்லியல்
2. கல்வெட்டியல்
3. நாணயவியல்
4. இலக்கிய ஆய்வு
5. மொழியியல் ஆய்வு
6. இலக்கியத் திறனாய்வு
7. படைப்பிலக்கியம்
8. மொழிபெயர்ப்பு
9. இசை, நடனம், ஓவியம் மற்றும் சிற்பம்

- தனித்தன்மையும் மேன்மையும் உலகளாவிய ஏற்பும் பெற்ற ஒரு நூலிற்காக அல்லது வாழ்நாள் பங்களிப்பிற்காக இவ்விருது வழங்கப்படும்.

- விருதுபெறும் அறிஞர் எந்த நாட்டினைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்; விருதுபெறும் நூல் அறிவுலகைக் கவர்ந்த பெருமையுடையதாயின் எந்த மொழியிலும் இருக்கலாம்.
- விருதிற்குத் தகுதியுடைய அறிஞரின் பெயரைப் பின்வருவோர் பரிந்துரை செய்யலாம்.

    அ) ஏற்கனவே இந்த விருது பெற்ற விருதாளர்கள்.

    ஆ) தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு மற்றும் நுண்கலை ஆகிய துறைகளின் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்.

    இ) உலக/தேசிய அளவிலான விருதினைப் பெற்ற அறிஞர்கள்.

- ஒருவர் தம்முடைய பெயரைத் தாமே பரிந்துரை செய்தல் கூடாது.
- வெளியீட்டு விவரங்களுடன் பரிந்துரைக்கப்படுபவரின் நூல்கள் (ஆய்வு, பதிப்பு, மொழிபெயர்ப்பு நூல் எதுவாயினும்), கட்டுரைகளின் படிகளைப் பரிந்துரையுடன் கட்டாயம் இணைத்தனுப்ப வேண்டும்.
- விருதுபெறும் அறிஞர் விருது வழங்கும் விழா நாளன்று தங்களின் தமிழாய்வுப் பங்களிப்புக் குறித்துச் சொற்பொழிவு ஆற்றவேண்டும்.
- விதிமுறைகளின்படி இல்லாத பரிந்துரை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- பரிந்துரைப் படிவத்தினை www.cict.in என்ற செம்மொழி நிறுவன இணையத்தளப் பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
- பரிந்துரைகளை **15.07.2024**ஆம் நாளுக்குள் **“பதிவாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600 100”** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**பதிவாளர்**

இறுதி நாள்: 15.07.2024

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை – 600 100

## கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது - 2024

<u>பரிந்துரைப் படிவம்</u>

<table>
<tr><td>I</td><td>பரிந்துரைப்பவரின் பெயர்</td><td colspan="10"></td></tr>
<tr><td>1.</td><td>முகவரி</td><td colspan="10"></td></tr>
<tr><td rowspan="3">2.</td><td rowspan="3">பரிந்துரை செய்ய உரியவர்களாக மேலே குறிப்பிட்டுள்ள மூன்று பிரிவுகளுள் பரிந்துரைப்பவர் எப்பிரிவைச் சார்ந்தவர் (✓)<br>(உரிய சான்றினை இணைக்கவும்)</td><td colspan="2">அ.</td><td colspan="8"></td></tr>
<tr><td colspan="2">ஆ.</td><td colspan="8"></td></tr>
<tr><td colspan="2">இ.</td><td colspan="8"></td></tr>
<tr><td>3.</td><td>பணி விவரம்</td><td colspan="10"></td></tr>
<tr><td>4.</td><td>தொலைபேசி எண்/ மின்னஞ்சல் முகவரி</td><td colspan="10"></td></tr>
<tr><td>II</td><td>பரிந்துரைக்கப்படும் அறிஞர் பெயர்</td><td colspan="10"></td></tr>
<tr><td>1.</td><td>முழு முகவரி<br>தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி</td><td colspan="10"></td></tr>
<tr><td rowspan="3">2.</td><td rowspan="2">பிறந்த நாள்</td><td colspan="2">நாள்</td><td colspan="2">மாதம்</td><td colspan="6">ஆண்டு</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>வயது</td><td colspan="10"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 3. | கல்வித் தகுதி | |
| 4. | பணியாற்றிய/ பணியாற்றும் நிறுவனம்,<br>பதவி, பணியாற்றிய காலம் | |
| 5. | 1. நூல்கள்:<br>(அ) எழுதியவை<br>(ஆ) பதிப்பித்தவை<br>(இ) மொழிபெயர்த்தவை<br>2. ஆய்வுக் கட்டுரைகள்:<br>(வெளியீட்டு விவரங்களுடன் நூல்கள், கட்டுரைகளின் பட்டியலையும் அதன் படிகளையும் இணைத்தனுப்ப வேண்டும்) | |
| 6. | ஏற்கனவே பெற்றுள்ள சிறப்புகள்<br>(அ) விருது, சிறப்புப் பட்டம் முதலியன<br>(ஆ) ஆண்டு<br>(இ) வழங்கிய நிறுவனம் | |
| 7. | செம்மொழித் தமிழுக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள் (மேற்குறிப்பிட்டுள்ள துறைகளுக்குட்பட்ட ஆய்வுப் பங்களிப்பை மட்டும் குறிப்பிட வேண்டும்) | |
| 8. | இந்த அறிஞரைப் பரிந்துரைப்பதற்கான சிறப்புக் காரணங்கள், வலுவான சான்றுகள் ஏதேனும் இருப்பின்... | |

நாள்:

இடம்:

**பரிந்துரைப்பவரின் கையொப்பம்**

* **குறிப்பு: மேலே ஒதுக்கப்பட்டுள்ள இடம் போதவில்லையெனில் தனித்தாளில் விவரங்களை இணைத்து அனுப்பலாம்.**